**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு**
**பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**

SRI LANKA
IMMIGRATION AND EMIGRATION

# விலைமனு கோரல்

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு Diletta 900i கடவுச்சீட்டு அச்சுப் பொறிக்கான பாவனைப் பொருட்களின் (Consumables) கொள்முதல்**

**ஒப்பந்த இலக்கம் (IFB): DIE/PRO/07/2025/43**

1. குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திற்கு **Diletta 900i** கடவுச்சீட்டு அச்சுப் பொறிக்கான பாவனைப் பொருட்களின் **(Consumables)** கொள்முதல் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால், தகைமையுள்ள சேவை வழங்குனர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக் கோரல் நடாத்தப்படும். (NCB)
2. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு, இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள வேலை நாட்களில் வேலை நாட்களில் மு.ப. **9.00** மணி தொடக்கம் பி.ப. **3.00** மணி வரை 011-2101559 எனும் தொலைப்பேசி இலக்கத்தை தொடர்புகாள்ளலாம். விலைமனு ஆவணங்களை எவ்வித கட்டணமும் இன்றி 2025.09.08. ஆம் திகதி முதல் 2025.09.26 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரயில் அல்லது இணையத்தளத்தில் (www.immigration.lk) பரீட்சித்துப் பார்க்கலாம்.
3. இதற்காக மீளளிக்கப்படாத ரூபா பன்னிரெண்டாயிரத்து ஐநூறு (ரூ.**12,500/-**) கட்டணத்தைச் செலுத்தி, எழுத்துமூல விண்ணப்பமொன்றை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுகஹுறுபாயா", **5** ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம், **2025.09.08** ஆம் திகதி தொடக்கம் **2025.09.26** ஆம் திகதி வரை மு.ப. **9.00** மணி தொடக்கம் பி.ப. **3.00** மணி வரை, அச்சிடப்பட்ட முழுமையான விலைகூறல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ளலாம். கட்டணம் காசாக மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.
4. "மூலப் பிரதி" **(Original)** "இணைப் பிரதி" **(Duplicate)** என்றவாறு தயாரித்து பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை **2025.09.29** ஆம் திகதி பி.ப. **2.00** மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, 3 ஆம் பந்தியிலுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது நேரில் வந்து ஒப்படைக்கப்படுதல் வேண்டும். விலைமனு சமர்ப்பிக்கப்டும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் IFB இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைகூறல்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிந்தவுடன் 2025.09.29 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு வருகைத்தருவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னால் விலைமனுக்கள் திறக்கப்படும்
5. விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து தொன்னூற்றியொரு **(91)** நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கு விலைமனுக்கள் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட உத்தரவாதமாக ஐந்து இலட்சம் ரூபா (ரூ. 500,000/-) பெறுமதியான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

.

தவிசாளர்
திணைக்கள கொள்முதல் குழு
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
5 ஆம் மாடி. "சுஹுறுபாயா",
ஸ்ரீ சுபூத்திபுர வீதி,
பத்தரமுல்லை.